சுருக்கம்

பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு ஜெகனேஷ், த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு எ.ஜெயபிரகாஷ் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பொதுப்பணித்(பி1)துறை</u>

அரசாணை (அடி) எண்.17

நாள் : 11.10.2022
சுபகிருது, புரட்டாசி - 24,
திருவள்ளுவர் ஆண்டு, 2053

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சென்னை கடித எண். நி3(3)/4491/2020, நாள் 19.08.2020, 25.03.2021 மற்றும் 28.03.2022.

---

<u>ஆணை:-</u>

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சென்னை அவர்கள் பொதுப்பணித் துறையில் 30.10.1997 அன்று பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு எ.ஜெயபிரகாஷ், தலைமைப் பணியாளரின் மகன் திரு ஜெகனேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் வேலூர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகத்தைச் சார்ந்த, திருவண்ணாமலை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தில் 05.04.2013 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியேற்றுள்ளார் என்று தெரிவித்து, தனியரின் பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றாவணங்களையும் அரசுக்கு அனுப்பி வைத்து, தனியர் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 05.04.2013 முற்பகல் முதல் இளநிலை

உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை ஆய்வு செய்தபின் அதனை ஏற்கலாம் என அரசு முடிவு செய்தது. அதன்படி, பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்துவரும் திரு ஜெ.கணேஷ், த/பெ. காலஞ்சென்ற திரு எ.ஜெயபிரகாஷ் என்பவரின் பணியினை தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 05.04.2013 முற்பகல் முதல் வரன்முறை செய்ய, குறும வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதி குறித்து, தனியர் பொருட்டு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசு ஆணையிலிருந்து விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20(6)ல் மற்றும் பணப்பலன்களை பணியில் சேர்ந்த நாள் முதல் வழங்க மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 28(2) ஆகியவற்றினை இச்சட்டத்தின் பிரிவு 53-இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி ஆளுநர் அவர்கள் தளர்வு செய்கிறார்.

3. தனியரின் பணியினை வரன்முறை செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை, அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண்.15736/டி.1/2022, நாள் 06.10.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:-

முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை -5.

நகல்:-

மாநில கணக்காயர், சென்னை - 18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்